# 3 வருடங்களுக்குள் மனிதன் சந்திரனில் இறங்குவான்

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 301
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 14 ஜா ஆகிர் 25 சனிக்கிழமை [30-9-67]

### அமெரிக்க விஞ்ஞானி அறிவிப்பு

பெல்கிரேட், செப். 29 அம்புலித் தரையில் மனிதனை இறக்கிவிடுவதற்கான எல்லையாக 1970-ம் ஆண்டு குறிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க விஞ்ஞானிகள் இக்காலக் கெடுவை முன்னமேயே அறிவித்திருக்கின்றனர். இந்த ஆண்டுகளுக்கிடையிலேயே மனிதனை சந்திரமண்டலத்தில் இறக்கிவிட முடியும் என்று இப்பொழுது அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகின்றனர். தேசியவிமானவியல் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் [நாசா] அதிகாரியான டாக்டர் ஜோர்ஜ் மியூலர் இத்தகவலை வெளியிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி கென்னடி அவர்கள் மறைவதற்கு முன்னர் சந்திரமண்டலத்தில் மனிதனை இறக்குவதற்கு 1970-ம் ஆண்டை எல்லையாகக் குறிப்பிட்டார். அவ்வெல்லைக்குள்ளாகவே திட்டம் நிறைவேற்றப்படும் என்று டாக்டர் மியூலர் தெரிவித்தார். விண்

[2-ம் பக்கம் பார்க்க]

# "சட்டரீதியாகவே உள்ளூராட்சி மன்றங்களை கலைத்தேன்"

## ரூ. 10 லட்சம் பெறுமதியான கள்ளக்கடத்தல் தங்கம்

### திருச்சியில் பிடிபட்டது

திருச்சி, செப். 29 திருச்சியில், ஒரு காரில் வைத்து, பத்துலட்சம்ரூபா பெறுமதியான 55 கிலோ. கள்ளத்தங்கம் பிடிக்கப்பட்டது.

இந்தக்கார், பம்பாயிலிருந்து பங்களூர் வழியாகத் திருச்சி சென்றுகொண்டிருந்தது.

கைப்பற்றப்பட்ட தங்கத்தில், வெளிநாட்டுஅடையாளங்கள் இருக்கக் காணப்பட்டன.

இது சம்பந்தமாக, இருவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பதவியைத் துஷ்பிரயோகம் செய்யவில்லை

### டாக்டர் என். எம். க்கு அமைச்சர் திருச்செல்வம் பதில்

கொழும்பு, வெள்ளி

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா தன்மீது சாட்டிய குற்றச்சாட்டுகளுக்கு உள்ளூராட்சி மந்திரி செனட்டர் திரு. எம். திருச்செல்வம் நேற்று செனட்சபையில் பதிலடி கொடுத்தார்.

உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றைக் கலைத்தபோது உள்ளூராட்சி மந்திரி என்ற முறையில் சட்டரீதியாகவும், நீதியாகவுமே நடந்துகொண்டேன் என்று மந்திரி நேற்று சபையில் கூறினர்.

கமிஷனர் திரு. டபிள்யூ. ஜே. பெர்னுண்டோவின் அறிக்கையைத் தொடர்ந்தே யாழ்ப்பாணம்மாநகர சபையைக் கலைத்ததாகவும் அமைச்சர் கூறினர்.

எனது பதவியைத் துர்ப்பிரயோகம் செய்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் எதிர்க்கட்சியின் ஆதிக்கத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளை கலைக்கவில்லையென்றும் அமைச்சர் சொன்னர்.

டாக்டர் என். எம். பெரேரா அரசியலில் தோல்வியுற்றவராக இருந்தபோதிலும், அவர் பொதுமக்களின் தலைவர் என்ற முறையில் அவருடைய குற்றச்சாட்டுகளை மதித்துபதில் சொல்லவேண்டியது அவசியமாகிறது என்று அமைச்சர் கூறினர்.

டாக்டர் என். எம். பெரேராவின் மற்றொரு குற்றச்சாட்டையும் அமைச்சர் மறுத்தார்.

'தேசியசேவை அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியாக பதவிவகிக்கும் எனது சகோதரர் திரு. எம். ராஜேந்திரா, உள்ளூராட்சிமன்றங்கள் பற்றி விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேஷ கமிஷனின் தலைவராக நியமிக்கப்பட்டது நான்தான் எனக் குற்றஞ்சாட்டியிருப்பது தவருனதாகும்' என்று கூறிய அமைச்சர், டாக்டர் பெரேரா இவ்வளவு முட்டாளாக இருப்பதற்கு வருத்தம் தெரிவிப்பதாகக் கூறினர்.

## 'தெய்வேந்திரம் வாயினுல் இரத்தம் வழிந்தது'

### நாவலர் சந்தி கொலைவழக்கில் மனேஜர் சர்மா சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி 'கடைக்கு எதிரே கார் மெதுவாக வந்தது. பின் சீட்டில் 1-ம், 3-ம் எதிரிகள் இருந்தனர். உடனடியாக துவக்குச்சூட்டுச் சத்தம் கேட்டது. துவக்கின் நுனிப் பாகத்தைக் கண்டேன். முதலாம் எதிரி துவக்கைவைத்திருந்தார். உடனே நான் எழுந்துவாசலுக்குவந்தேன். தெய்வேந்திரம் படிகளில் சரிந்து விழுந்துகிடந்தார். வாயினுல் இரத்தம்வழிந்து கொண்டிருந்தது.'

நாவலர்சந்தி படுகொலை வழக்கில் சாட்சியமளித்த பற்றறி கடை மனேஜர் சர்மா மேற்கண்டவாறுகூறினர். இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் மூன்ருவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ந் திகதி யாழ்ப்பாணம் காங்கேசன்துறைவீதியில் 18 வயதான சுப்பிரமணியம் தெய்வேந்திரத்தை, சீனு இரத்தினம், நடராசா சுப்பிரமணியம், முருகேசு சண்முகம் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரிசார்பில் அட்வகேட் ஏட்வி பெரேரா, புறக்டர் எஸ். செல்லத்துரையின் அனுசரணையுடன் ஆஜராஞர். 2ம் எதிரிசார்பில் அட்வகேட் அரசுவாலடன், புறக்டர்களான ஆர். விஸ்வநாதன், கே. பரமசிவம்பிள்ளை,

[2-ம் பக்கம் பார்க்க]

## கொலை நடந்த இடத்துக்கு கோர்ட்டார் விஜயம்

யாழ்ப்பாணம், சனி நாவலர் சந்திக்கு நேற்று நண்பகல் சுப்ரீம் கோர்ட்டார் விஜயம்செய்து சம்பவம் நடந்த கடையைப் பார்வையிட்டனர்.

நீதியரசர் வி. மாணிக்கவாசகர், ஜூரிகள், முடிக்குரிய வழக்கறிஞர், எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், சாட்சிகள், எதிரிகள், பொலிசார், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றனர்.

நாவலர் சந்தியில் சுமார் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு கொண்டிருந்தனர். நீதியரசர், ஜூரிசபையினர் வழக்கறிஞர்கள் கடைக்குள் சென்றுஇடங்களைப்பார்வையிட்டனர்.

இவ்வழக்கு சம்பந்தப்பட்டகாரையும் நீதியரசர், ஜூரிசபையினர், வழக்கறிஞர்கள் பார்வையிட்டனர். இக்கார் நீதிமன்ற வழவுக்குள் நிறுத்தப்பட்டிருந்தது.

## பஸ்ஸில்லாமல் பிரயாணிகள் தவிப்பு

### ஆனுல் டிப்போவில் 35 பஸ்கள் தூங்குகின்றன

குரும்பசிட்டி, வெள்ளி கோண்டாவில் இ.போ.ச. மத்திய டிப்போவில் பஸ் இயந்திரங்களின் உதிரிப் பாகங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தால் சுமார் 35 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் படாமல் வெறுமனே நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இதனுல் புதன் கிழமை முதல் யாழ்ப்பாணத்தின் பல பகுதி பஸ்சேவைகளும் பெரிதும் சீர்கேடு அடைந்துள்ளதாகத் தெரிகிறது. கடந்த இரு தினங்களில் யாழ்ப்பாணம்- கீரிமலை [பலாலி ஊடாக] பாதையில் இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒருமுறைதானும் பஸ் கிடைப்பதில்லை எனப் பிரயாணிகள் பலரும் புகார் தெரிவிக்கின்றனர். யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் அநேகமாக எல்லா பஸ் சேவைகளுக்கும் நீண்ட பிரயாணிகள் கியூ காணப்படுவதைப் பலரும் காணக்கூடியதாக இருக்கிறது. யாழ்ப்பாணம்- கீரிமலைப் பாதையில் டிப்போ புன்னலைக் கட்டுவன் தெற்கு-வடக்குப்போன்ற இடங்களுக்கு குறுகிய தூரபஸ்கள் விடப்படுவதால் வசாவிளான், மயிலிட்டி. பலாலி போன்றஇட

(6-ம் பக்கம் பார்க்க]

1. யானை மார்க் நம்பர் 1 சீமென்ஸ

ஒடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.
மறவாதீர்—சீமென்ஸ்.

2. சீமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காயெ[illegible] ஆமணக்கெண்ணை கூந்தல் வளர்[illegible] தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3. சீமென்ஸ் புத்தராஜா தைலம்

தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநீசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஔஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எனக்கு நானே நன்மை செய்துகொண்டு ஒரு மோட்சத்தை அடைவதை விட ஆயிரம் பேருக்கு நன்மைசெய்து நரகத்தை அடையச் சித்தமாயுள்ளேன்.

—சுவாமி விவேகானந்தர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க௵ புரட்டாதி 14௳ 30-9-67)

## நெசவுத் தொழில்

"மகாத்மாகாந்தியின் கதர் இயக்கம், இந்திய மக்கள் தமக்குத் தேவையான ஆடைகளைத் தாமே உற்பத்தி செய்துகொள்ள உதவியது. இந்திய மக்களைப் பின்பற்றி இலங்கை மக்களும் நெசவுத் தொழிலை விருத்தி செய்து கொள்ள வேண்டும்" என்று பிங்கிரிய எம். பி. ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருப்பது, இந்தியா என்றதும் எதையும் துவேஷ மனப்பான்மையுடன் நோக்கும் சில அரசியல் வாதிகளுட்பட இலங்கை மக்கள் அனைவரின் சிந்தனையைத் தூண்ட உதவவேண்டும்.

இந்தியாவுக்கு விடுதலை கிடைக்க வேண்டுமானால் இந்திய மக்கள் மனதில் தேசாபிமானம் அபரிமிதமாக ஏற்படவேண்டுமென்றும் இதற்கு ஒரு வழி அந்நிய துணிமோகம் நீங்கி சுதேசி ஆடைகளில் ஆர்வம் தோன்ற வேண்டுமென்றும் காந்திஜி கருதினார். இதை அடிப்படையாகக் கொண்டு அவர் நிர்மாணத் திட்டம் ஒன்றை வகுத்தார். அது வெற்றியளித்தது. இலங்கைக்கு சுதந்திரம் சுலபமாகக் கிடைத்தது. சுதந்திரத்தின் பின்னரும் கூட மக்கள் மனதில் தேசிய உணர்ச்சியை ஊட்டுவதற்குத்தலைவர்கள் தவறிவிட்டனர். குறுகிய தேசியவாதம் நாட்டுக்கு நீடித்த நன்மையைத் தரமாட்டாதென்பதை இப்போது அரசியல்வாதிகள் சிறிது சிறிதாக உணரத் தொடங்கிவிட்டனர் போல் தோன்றுகிறது.

உணவு நெருக்கடி ஏற்பட்டது தீமையிலும் ஒரு நன்மை. உள்நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் ஊக்கமளிக்கிறது. மக்கள் மத்தியிலும் ஓரளவு உற்சாகம் தோன்றியுள்ளது. உணவுக்கு அடுத்ததாக மனிதனுக்கு உடை அத்தியாவசியம். உடைக்கும் இங்கு தட்டுப்பாடுதான். உள்நாட்டில் நெசவுத் தொழிலுக்கு ஊக்கமளிக்கவும் இதேசமயம் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவும் அரசாங்கம் ஏதோ முயற்சி செய்துவருகிறது. என்றாலும் நெசவுத்தொழிலுக்கு மிக அத்தியாவசியமான பருத்தி நூலுக்கு இன்னும் வெளிநாடுகளையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் இருநூறுக்குமதிகமான நெசவு நிலையங்களிருக்கின்றன. ஆயினும் போதிய பருத்தி நூல் இல்லாத காரணத்தால் அத்தொழில் வளர்ச்சியடைய முடியாமலும் நெசவுத்தொழிலைமட்டும் நம்பியிருக்க முடியாமலுமுள்ளது.

இங்கு பருத்தி உற்பத்திக்கும் நூல் நூற்பு இயக்கத்துக்கும் வழிவகுத்து அதை ஒரு தேசிய இயக்கமாக்கினால் நமக்குத் தேவையான ஆடைகளை நாமே உற்பத்திசெய்வதுடன் அந்நிய துணிகள் மீதுள்ள மோகமும் குறையும்; தேசிய உணர்ச்சியும் அதிகரிக்கும்; வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும்.

# "திரு. வீரமனுக்கு மீண்டும் அதே பதவி வழங்குக"

## அரசாங்கத்துக்கு மகஜர்

யாழ்ப்பாணம், சனி

"கூட்டுறவு முறை மூலம் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்த முடியும் என்பதற்கு திரு. வீரமனின் அறிவுரைகள் இன்றியமையாதனவாகும். இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி பூரணவிசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் ஒரு விசாரணைக்குழுவை நியமிக்க உத்தேசித்திருக்கும் இத்தருணத்தில் அனுபவமும் தேர்ச்சியும் வாய்ந்த திரு வீரமனை கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளர் பதவியிலிருந்து மாற்றியது முறையற்றது" என இலங்கை கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளரான திரு. பி. ஈ. வீரமனை அப்பதவியிலிருந்து மாற்றியது சம்பந்தமாக வடபகுதி ஐக்கிய மேற்பார்வையாளர் சபை வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் அதிருப்தி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இவ்வறிக்கையில் திரு. வீரமனின் சேவை, அனுபவம், சேவைத் திறமை மற்றும் அவர் தொடர்ந்து அதே பதவியிலிருப்பதால் கூட்டுறவு இயக்கத்துக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு அவருக்கு மீண்டும் அதே பதவியையே வழங்குமாறும் வற்புறுத்தப்பட்டுள்ளது. [ந. நி.]

மூன்று தினங்கள் நடைபெற்ற

# கைதடி சைவமகாநாடு

கைதடி இது ாலிபர் சங்கத்தின் 4-வது சைவ மாநாடு மூர்த்தியாவத்தைக் கந்தசுவாமி கோவில் வீதியில் இம்மாதம் 24-ம் 25ம் 26 ம் திகதிகளில் நடைபெற்ற சைவ மாநாட்டு நிகழ்ச்சிகளின் தொகுப்புரை இங்குதரப்படுகிறது. தொகுத்தவர்: கைதடியூர் ஆ. கந்தையா

### முதலாம் நாள் நிகழ்ச்சிகள்

அன்றுகாலை கைதடி கந்தசுவாமி கோவிலில் சிறப்பு வழிபாட்டுடன் ஆரம்பிக்கப் பெற்றது. மாலை நிகழ்ச்சிகளில் கைதடி வடக்கு கலைமகள் மாதர்சங்க மாணவிகள் திருமறை ஓத முன்னாள் கிராம அதிகாரி திரு. ச. நவரத்தினம் சங்க ஏற்றுயர் கொடியையேற்றி வைத்தார். இணைச் செயலாளர் இ. நடராசா வரவேற்புரை நிகழ்த்தினார். மாநாட்டுத் திறப்புரையை நிறைவேற்றி வைத்த மதுரை ஆதீன நல்லூர்க்கிளை அதிபர் ஸ்ரீலஸ்ரீசுவாமிநாததம்பிரான் சுவாமிகள்பேசும்போது நம்முடைய சமய நூல்கள் பாவம் செய்யாமை, வாழ்வில் சீலம், இறையுணர்வு ஆகிய மூன்று உத்தம இலக்கணங்களைக் கூறுகின்றன. இந்த மூன்று பண்புகளையும் வளர்க்கவே நீதி நெறி நூல்களும், சமய நூல்களும் தோன்றின எனக் குறிப்பிட்டார்.

'திருஞானசம்பந்த நாயனார்' அரங்கிலே நடைபெற்ற மேற்படி மாநாட்டுக்கு தலைமை தாங்கிய தென்மராட்சிக் காரியாதிகாரி திரு இ. சிதம்பரப்பிள்ளை தலைமையுரையில் "இறைவனை கனவிலும் நினையாமல் அவன் திருத்தாள் பணியாதிருப்போர்க்கு பிறவிக் கடலை நீந்த முடியாது. அன்பருடனே கூடி அனுதினமும் துதி பாடினால்தான் இன்ப சமுத்திரமாகிய முத்தியின் பதத்தை அடையலாம்" என்றார்.

அடுத்து இலங்கை சைவ இளைஞர்சபை செயலாளர் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை "மேன்மை கொள் சைவநீதி" என்னும்பொருள் பற்றியும், யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் "சமயவாழ்க்கை" என்னும் பொருள் பற்றியும் சொற்பெருக்காற்றினர்.

### இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் காலைபாடசாலை மாணவர்களிடையே பேச்சுப் போட்டிகள் நடாத்தப் பட்டன. மாலை காரைக் காலம்மையார் அரங்கிலே சமய வகுப்பு மாணவர்களின் கடவுள் வாழ்த்துடன் தென்மராட்சி மேற்கு திருஞானசம்பந்தர் சபைத் தலைவர் திரு. நா. பொன்னம்பலத்தின் தொடக்கவுரையுடன் பண்டிதை திருமதி. சத்தியதேவி துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது. தலைமையுரையில் "தெய்வப் பேரின்பம் என்பது உள்ளத்தின் உணர்வில் தானே கண்டு அனுபவிக்க வேண்டிய ஓர் அனுபவம் இந்த அனுபவப் பொருளைப் பற்றி [illegible] பயனில்லை" எனக் குறிப்பிட்டார். தமிழ்மணி வீ. எஸ். கணேசசுந்தரன் சிறப்புரைநிகழ்த்தினார். அடுத்து பண்டிதை சி. தவமலர் "சைவ மங்கையரின் தொண்டுகள்" பற்றியும் வித்துவான் மு. சபாரத்தினம் சமயக் கல்வி என்னும் பொருள் பற்றியும் சொற்பெருக்காற்றினர்.

சைவம் வளர்த்த பெண்மணிகளுள் தலை சிறந்தவர் திலகவதியாரா? அல்லது மங்கையற்கரசியாரா? என்ற கருத்தரங்கிலே கைதடி மேற்கு பராசக்தி மாதர் சங்கத்தைச் சேர்ந்த சைவப் புலவர் சு. செகசோதியம்மா இ. மகேஸ்வரி, க. கண்மணி ஆகியோர் திலகவதியார் பற்றியும் கைதடி வடக்கு அம்பிகா மாதர் சங்கத்தைச் சேர்ந்த செல்வி. அ. இராசலட்சுமி, செல்வி. க. பரிமளாதேவி, செல்வி. செ. இராசம்மா ஆகியோர் மங்கையர்க்கரசியார் பற்றியும் பேசினர்.

விழாமுடிவில் சைவமாநாட்டுப் பேச்சுப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுடையே பேச்சுக்களும் செல்வன் கு. சிவபாதம் குழுவினரின் தவில் கச்சேரியும் இணுவில் சகோதரிகள் பூலோகநாயகி - கௌசலாதேவி ஆகியோரின் இசைவிருந்தும் இடம் பெற்றன.

### மூன்றும் நாள்

மூன்றும் நாள் நிகழ்ச்சிகளில் காலை சைவமாநாட்டு மனனப்போட்டிகள் நடைபெற்றன. மாலை சேக்கிழார் அரங்கிலே நடைபெற்ற மாநாட்டுக்கு பண்டிதர் வித்துவான் க. கி. நடராசன் தலைமையுரையில் 'புராணபடனம்' இப்போது எங்கும் அருகி வருகின்றது. ஆறுமுகநாவலர் காலத்தில் பெண்களும் புராணத்தில் தோய்ந்து பயன் படிப்பார்கள். இப்போது இந்நிலை மாறி சினிமா உலகமாக வருகின்றது. இது நாளடைவிலே திருந்த வேண்டுமாயின் சைவமாநாடுகள் நடாத்துவது மிகப் பொருத்தமாகும்." என்றார்.

திரு. இ. கந்தையா தொடக்கவுரை நிகழ்த்தினார். வித்துவான் சைவப் புலவர் கலைமாமணி திரு. க. கணபதிப்பிள்ளை "பெரிய புராணம்" என்னும் பொருள் பற்றியும் சைவப் புலவர் திரு. சு. செல்வத்துரை "சமயம்" என்னும் பொருள்பற்றியும் பேசினார்.

திருமதி ம. நகுலேஸ்வரனின் மாணவிகள் இசை விருந்தளித்தனர்.

## இன்றைய பலன்

30-9-67
சனிக்கிழமை
(புரட்டாதிமாதம் 14௳)

நட்சத்திரம் - ஆயிலியம் இரவு 7-32 வரை மேல் மகம்.

திதி - ஏகாதசிபகல் 10-01 வரை மேல் துவாதசி.

சுபநேரம் - 9-02-10-32

ராகுகாலம் - 10-32 - 12-02

மேஷம் - தொழிலில் மந்தம், வரவில் தடை.

ரிஷபம் - பொருள் வரவு. புனித எண்ணம்.

மிதுனம் - சிந்தனைவலை, தடுமாற்றம்.

கடகம் - மாதுருவளி சுகக் குறைவு, அமைதியின்மை.

சிம்மம் - வாக்குப் பலிதம், வாழ்த்துமுண்டு.

கன்னி - ஆசாரக் குறைவு, ஆசாரமனப்பான்மை.

துலாம் - மனைச்சிறப்பு, மக்கள் நலன்.

விருச்சிகம் - பாக்கிய விருத்தி, பாசவுணர்ச்சி.

தனுசு - ஆயுதபீடை, அவதானம்வேண்டும்.

மகரம் - காதலுண்டு, கவலை நீங்கும்.

கும்பம் - துஷ்டர் உறவு, துயரச்செய்தி.

மீனம் - மனத்திடம், மதிப்பும் உயரும்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## தெய்வேந்திரம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 3ம்எதிரி சார்பில் எதிரிகளுக்காக அரசாங்கத்தால் நியமிக்கப் பட்ட அட்வகேட் எம். தேவசகாயம் ஆஜரானார்.

மனேஜர் சர்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: அக்காரின் நம்பரை அவதானித்தேன். இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்பும் காரை அவதானித்தேன். கார்சாரதியை எனக்குத் தெரியாது. சம்பவம் நடந்தபோது, குலசிங்கமும் தெய்வேந்திரமும் படிகளில்இருந்தனர். அப்பொழுது தேநீர் குடித்தனர். சம்பவம்நடந்த பின் நான் முதலாளி மகேந்திரனுக்கு அறிவித்தேன்,

அரசாங்க ரசாயன பரிசோதகர், திரு. சபா நடேசன், இன்ஸ்பெக்டர் ஆர். சௌந்தரநாயகம் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

# ஐயாறன் எழுதுகிறார்

"இலங்கைப் பல்கலைக்கழகம் வருடாவருடம் பட்டதாரிகளை உற்பத்திசெய்து அனுப்புவது போல செல்வி "திரு" குமாரசாமி, பரத நாட்டியக் கலைஞர்களைத் தயாரித்துஅளித்துவருகிறார்" என்றிவ்வாறு நேற்று முன்தினம் யாழ்ப்பாண நகர மண்டபத்திலே நடந்த செல்வி வனிதாவின் பரத நாட்டிய அரங்கேற்ற விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய அரசாங்க அதிபர் அபயசேகரா கூறியதும் சபையில் பலரும் மகிழ்ச்சியுடன் கரகோஷம் செய்து ஆமோதித்தார்கள். "திரு" குமாரசாமியின் கலைமன்றத்திலே ஐந்து வருடங்கள் கலை பயின்ற, "திரு" குமாரசாமி பலரது பாராட்டுதலையும் பெற்றார்.

இக்காலத்தில் எவ்வளவோ பேர் பரதமாடுகின்றனர். ஆனால் இதில் விசேஷமென்னவெனில் ஈழத்திலே ஒரு கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த வனிதா, பரதநாட்டியத்தை ஆர்வத்துடன் கற்று அழகாக ஆடியதுதான்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாண பிஷப் எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் இதற்கு நல்ல ஆசிமொழி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. பரத நாட்டியக் கலைமூலம் வனிதா பஸ்தியாம்பிள்ளை, கத்தோலிக்க, இந்து சமூகங்களுக்கிடையே ஒரு சமரசம் ஏற்படுத்தியுள்ளது போற்றத்தக்கது.

மேடையிலே ஸ்ரீ நடராஜ விக்கிரகம் புனிதமாகக் காட்சியளித்தது. அழகான தோரணங்களும் இருபெரிய குத்துவிளக்குகளும் மேடையை அலங்கரித்தன. இடைவேளைக்குப் பிறகு தான் சென்று பார்த்தேன். ஒரு கத்தோலிக்க பெண்மணி பரதநாட்டியம் கற்று இவ்வளவு அழகாக ஆடியது போற்றத்தக்கது. "குனித்த புருவம்", "இடது பாதம் தூக்கிஆடும்", "வள்ளிக் கணவன்" முதலிய பாடல்களுக்கு வனிதாவின் அபிநயம் என்மனதைப் பெரிதும் கவர்ந்தன.

பரதநாட்டியத்துக்கேற்ற உடலமைப்பும், கலை அழகும் பெற்றுள்ளதால் இவரது கலையும் புகழும் எதிர்காலத்திலே அதிகம் சிறக்க இடமுண்டு. சென்னையிலே நடக்கும் பரதநாட்டியத்தை விட சில விஷயங்களில் இங்கு முன்னேற்றம் அதிகமுள்ளதாக ஒரு நடனக் கலைஞர் சரியாகத் தெரிவித்தார்.

தன் கலை மூலம் சமூக சமரசத்தையும், ஈழத்துக்கு ஒரு புதுப் பெருமையையும் ஈட்டித்தந்துள்ள வனிதாவையும், அவரது குருவையும், பெற்றோர்களையும் பாராட்டவேண்டும்.

ஃ ஃ ஃ

குனித்தபுருவமும் கொவ்
வைச் செவ்வாயிற் குமிண்
சிரிப்பும்,
பனித்த சடையும் பவளம்
போல் மேனியில் பால்
வெண்ணீறும்,
இனித்த முடைய எடுத்த
பொற்பாதமும் காணப்
பெற்றால்,
மனித்தப் பிறவியும் வேண்டு
வதே இந்த மானிலத்தே.

— அப்பர்சுவாமிகள்.


[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வெளியில் பரிசீலனைத் திட்டங்கள் சர்வதேச ஒத்துழைப்புடன் நடைபெற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். விண்வெளி ஆராய்ச்சித்திட்டங்களில் ஏனைய நாடுகளின் ஒத்துழைப்பை அமெரிக்கா கோரியிருக்கிறது என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டு வருடங்களுக்கு தொடர்ந்து உதவி

## பாகிஸ்தானுக்கு ரஷ்யா அளிக்குமென்கிறுர் அயூப்



மாஸ்கோ, செப். 29
பாகிஸ்தானுக்கு ரஷ்யா எட்டு வருடங்களுக்குத் தொடர்ந்து உதவியளிக்க உறுதியளித்துள்ளதாகப் பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப்கான் அறிவித்துள்ளார்.

நேற்று கிரெம்ளின் இராப் போசன விருந்தில் கலந்து கொண் பேசுகையிலேயே ஜனுதிபதி அயூப்கான் இவ்வாறு கூறினுர்.

### ஆயுத சமபலமின்மை

தொடர்ச்சியாகவும், பெரிய அளவிலும் ரஷ்யா, 1975ம் ஆண்டுவரை, பாகிஸ்தானுக்குப் பல துறைகளிலும் உதவியளிக்க ஒப்புக் கொண்டுள்ளதாக அயூப்கான் தெரிவித்தார்.

இந்திய உப கண்டத்தில் ஆயுத சமபலமின்மை நிலவும் ஆபத்து தவிர்க்கப்பட வேண்டுமென்பதே பாகிஸ்தானின் ஆவலாகவிருப்பதாகவும் அயூப்கான் கூறினுர்.

# அண்டை நாடுகளுடன் அமைதி வாழ்வையேஇந்தியாவிரும்புகிறது

## குஜராத்தில் பிரதமர் இந்திரா

அகமதபாத், செப்.28

அண்டை நாடுகளுடன் அமைதியாக வாழ்ந்து, அவற்றுடன் ஒத்துழைக்கவே இந்தியா விரும்புவதாக இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி அறிவித்துள்ளார்.

குஜராத்தில், புச் என்னுமிடத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயே இந்தியப் பிரதமர் இவ்வாறு கூறினுர்.

### பொதுப்பிரச்னை

பாகிஸ்தானுடன் போர் தொடுக்க இந்தியா விரும்பவில்லை என்ருர் அவர். இரு நாடுகளுக்கும் பொதுவான பிரச்னை ஒன்று இருக்கிறது. அதுதான், வறுமையையொழிப்பது. அப்பிரச்னையைத்தீர்ப்பதில் இருநாடுகளும் ஒத்துழைக்கவேண்டும் என்று திருமதி இந்திரா காந்தி கூறினுர்.

### அகிம்சை

மகாத்மாகாந்தி காட்டிய அகிம்சை வழியையே இந்தியா பின்பற்றுவதாகப் பிரதமர் கூறினுர். ஆனுல், அபாயம் ஏற்படும்போது, இந்தியா தன்னைத் துணிவுடனும், தைரியத்துடனும் பாதுகாத்துக்கொள்ளும் சக்தி பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அண்மைக்காலத்தில், நாட்டின் இரு எல்லைகளிலும் ஆபத்து ஏற்பட்டபோது, இந்தியா இதை நிரூபித்துள்ளதாகவும் பிரதமர் கூறினுர்.



### ஆயத்தம்

முன் எப்போதிலும் பார்க்க, இப்போது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க இந்தியாவின் முப்படைகளும் ஆயத்தமாக இருப்பதாக பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.



## யூ தாண்ட் வேண்டுகோள்

நியூயோர்க், செப், 29
சூயஸ்கால்வாய் பகுதியில் ஐக்கிய அரபுக் குடியரசும் இஸ்ரேலும் சண்டையிடுவதை நிறுத்துமாறு ஐ. நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட் இரு நாடுகளையும் விண்ணப்பித்துக்கொண்டுள்ளார்.

இரு நாடுகளும் தமது போக்கில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ள யூ தாண்ட், சூயஸ் பகுதியில்நிறுத்தப்பட்டுள்ள ஐ நா. பார்வையாளர்களை அவை பயன்படுத்தியிருந்தால், அண்மையில் நடைபெற்ற துரதிர்ஷ்ட சம்பவங்களைத் தவிர்த்திருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அண்டை நாடுகளில் சீனு சதி வேலைகளில் ஈடுபடுகிறது

## ஐ. நா பொதுச்சபையில் இந்தோனேஷியா புகார்

நியூயோர்க், செப். 29
சதி வேலைகளிலும், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் இந்தியா ஈடுபட்டு வருவதாக இந்தோனேஷிய வெளியுறவுமந்திரி டாக்டர் ஆதாம்மாலிக், ஐ. நா. பொதுச்சபையில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தோனேஷியாவில் மட்டுமன்றி மற்றும் பல அண்டை நாடுகளில் சீனு இவ்வித நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக டாக்டர் மாலிக் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சீனுவின் இந்த நடவடிக்கைகளினுல், தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையேயான உறவுகளும் பாதிக்கப்பட்டு வருவதாக டாக்டர் மாலிக் தெரிவித்தார்.

# இந்திய அரசின் தடையை சீனத்தூதரகம் மீறியது

புதுடில்லி, செப். 29
இந்திய அரசாங்கம் விதித்த தடைகளை மீறி, புதுடில்லியிலுள்ளசீனத்தூதரகம், சீன தேசிய தினத்தை முன்னிட்டு, இந்தியர்களுக்கு அழைப்புகள் விடுத்துள்ளது.

சீனத் தூதரகம் அனுப்பும் அழைப்புகள் யாவும், பரிசீலனைக்காக இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டுமென இந்திய அரசாங்கம் அண்மையில் உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனுல் சீனத்தூதரகம், அதை உதாசீனம் செய்துவிட்டு, அழைப்புகளை நேரே சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பியுள்ளது.

### திருப்பி அளிக்கின்றனர்

பீகிங்கில், இந்திய தூதரகத்துக்கு, அதன் அழைப்புகள் சீன வெளிவிவகார அமைச்சுக்குப் பரிசீலனைக்கு அனுப்பப்படவேண்டுமெனத் தடைவிதிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தியாவும் இத் தடையை விதித்திருந்தது.

அரசாங்கத்தின் கட்டளையை மீறி, சீனத் தூதரக அழைப்புகள் அனுப்பப்பட்டிருப்பதால், தமக்கு அனுப்பப்பட்ட அழைப்புகளை இந்தியர்கள் திருப்பி அனுப்பிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

## ஹைதரபாத்தில் மாணவர் கலவரம்

ஹைதரபாத், செப் 29
ஹைதரபாத்தில் படிப்புச் செலவு உயர்ந்துள்ளதை எதிர்த்து நேற்று நான்காவது நாளாக மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் ஒரு பொலிஸ் ஜீப்புக்குத் தீ வைக்க முயன்றனர். ரயில்கள் மீது கல் வீசினர்.

மாணவ ஆர்ப்பாட்டக் காரரைப் பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்து கலைத்தனர்.

# சிரியா மந்திரிசபையில் புதிய மாற்றங்கள்

## நாஸருக்கு அதிக ஆதரவு

டமாஸ்கஸ், செப். 29
சிரியாவின் மந்திரி சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. முன்னைய மந்திரிசபையிலிருந்து 10 மந்திரிகள் நீக்கப்பட்டுள்ளனர். வேறு சிலர் புதிய மந்திரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

புதிய மந்திரி சபையில் மொத்தம் 32 மந்திரிகள் இருக்கிறுர்கள். இவர்களில் பெரும்பாலோர் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனுதிபதி நாஸருக்கு ஆதரவாளர்கள் என்று கூறப்படுகிறது. ஆகவே சிரியாவுக்கும் ஐ. அ. கு. வுக்கும் இனிமேல் நெருங்கிய தொடர்பும், ஒத்துழைப்பும் ஏற்படலாம் என நம்பப்படுகிறது.

முந்திய மந்திரி சபையிற் போலவே, புதிய மந்திரி சபையிலும், ஆட்சியிலுள்ள பாத் கட்சியே அதிக செலவாக்குப் பெற்றுள்ளது.

# பீகிங் சார்பு சுவரொட்டிகள் மலேஷியாவில் கண்டுபிடிப்பு

கோலாலம்பூர், செப். 29
மலேஷியாவில், பீகிங் சார்புள்ள, ஆயிரத்துக்கு மதிகமான சுவரொட்டிகள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

ஜோகூலில், இடதுசாரித் தொழிற்கட்சியின் அலுவலகத்தைப் பொலிசார் முற்றுகையிட்டபோது, இச் சுவரொட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கட்சியின் தலைவர்கள் ஏழு பேரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

## நஞ்சப்பா இந்தியா திரும்பினுர்

சென்னை, செப். 28
இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா திரும்பவிருப்பவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய அரசாங்கத்தின் மறுவாழ்வுத்துறை காரியதரிசி திரு. நஞ்சப்பா இன்று சென்னையிலிருந்து டில்லிக்குப்புறப்பட்டுப்போனுர்.

அவர் இலங்கைஅரசாங்கத்தோடும், இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் திரு. கண்டேவியாவுடனும், தோட்டத்தொழிலாளர்களின் பிரதிநிதிகளோடும் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

# கனடாவின் வியட்னும் சமாதான திட்டத்தை அமெரிக்கா பரிசீலனை

வாஷிங்டன், செப். 29
வியட்னுமில் சமாதானத்தை நிலைநாட்டும் நோக்கத்துடன் கனடா சமர்ப்பித்துள்ள ஒரு திட்டத்தை அமெரிக்கா இப்போது பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இத்திட்டத்தில், முதற்கட்டமாக வட வியட்னும் மீதான அமெரிக்க குண்டு வீச்சு நிறுத்தப்படவேண்டுமென்றும், இறுதிக்கட்டமாக, வியட்னுமிலிருந்து அந்நிய துருப்புகள் யாவும் வெளியேற வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், வியட்னுமில் சர்வதேச மேற்பார்வைக்கும் திட்டம் இடமளித்துள்ளது.

## வடவியட்னும் தளங்கள் மீது அமெரிக்கா குண்டு வீச்சு

இதற்கிடையில், வட வியட்னும் ஆயுத, உணவு சப்ளை தளங்கள் மீது அமெரிக்க விமானங்கள் நேற்றுத் தாக்குதல் நடத்தின.

ஹைபொங் பகுதியில், இரண்டு அமெரிக்க விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதாக வடவியட்னும் செய்தித் தாபனம் அறிவித்துள்ளது.

நேற்று சைகோனிலிருந்து [illegible] ஒரு விபத்தில் விமானத்திலிருந்து பறந்துவந்த ரொக்கெட்டினுல் தாக்கப்பட்டு, இரண்டு அமெரிக்கப் போர்வீரர் உயிரிழந்தனர். பத்து தென்வியட்னுமியரும் காயங்களுக்குள்ளாகினர்.

### ஐ நா. வில் கோரிக்கை

வடவியட்னும் மீதான குண்டுவீச்சை நிறுத்துமாறு, கனடாவைத் தொடர்ந்து, பிரான்சும், இந்தோனேஷியாவும் அமெரிக்காவை கோரியுள்ளன. இவ்விரு நாடுகளினதும் வெளியுறவு மந்திரிகள் நேற்று ஐ. நா. பொதுச்சபையில் இக்கோரிக்கையை விடுத்தனர்.

## இரு பிரிவாகும்

குரும்பசிட்டி, வெள்ளி
வலிகாமம் வடக்கு காரியாதிகாரி பிரிவு இரண்டு பிரிவுகளாக மாற்றி அமைக்கப்படுவதற்கான நடவடிக்கையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வோணன் அபயசேகரா ஈடுபட்டு வருகின்ருர். வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும் எனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நாடகக்கலை வளர்கிறது'

சுழிபுரம், வியாழன்

'சினிமாக்கலை வளர்ச்சியால் நாடகவளர்ச்சி தடைபட்டுவிடுமோவென அஞ்சிய இக் காலத்தில், சினிமாவைப் போல் நாடகங்களும்சிறப்புமிக்க வகையில் பல்வகையான யுக்திகளை பயன்படுத்தி சிறப்புடன்மேடையேற்றப்படுகின்றன.'

இவ்வாறு வழக்கம்பரை அம்மன்கோவில் வீதியில் மேடையேற்றப்பட்டநாடக நிகழ்ச்சி ஒன்றுக்கு தலைமை வகித்துப்பேசிய சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி குறிப்பிட்டார்.

## வீட்டுக்கு தீ வைத்ததாக வழக்கு

### சிறுமி சாட்சியம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

காரைநகர்- களபூமி வாசியான இராமுப்பிள்ளை சோமசுந்தரம் என்பவரின் வீட்டுக்குத் தீ வைத்து மூவாயிரம் ரூபா சேதம் விளைவித்ததாக அதேஇடத்தைச் சேர்ந்த இராமநாதர் தம்பிராசா என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு சென்ற வாரம் ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சோமசுந்தரத்தின் மகள் நேசமணி [வயது11] சாட்சியமளிக்கையில் ''சம்பவம் நடந்த அன்றுமாலை சிறு குழந்தையுடன் வீட்டில் இருந்தேன். தகப்பனார் வல்நூலைக்குப்போய் விட்டார். தாயார் வயலுக்குப் போய் விட்டார். மாட்டுக் கன்று கட்டுவதற்கு வீட்டுக்குப் பின்புறமாக வந்த பொழுது எதிரி வளவுக்குள் இருந்து வேலியைப் பிரித்துக்கொண்டு ஓடினார். அதே நேரத்தில் வீடும் எரிந்தது. நான் ஓடிப் போய் தங்கச்சியைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்து சத்தமிட்டேன். அயலில் உள்ளவர்கள் சத்தத்தைக்கேட்டுஓடி வந்தனர்'' என்றார்.

மேல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

## மீண்டும் தலைவரானார்

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத் தலைவராக திரு. சு. கந்தசுவாமி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தலைவர் தெரிவுக்கு மூவர் போட்டியிட்டனர். ஒருவர் போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். திரு. சு. கந்தசுவாமிக்கு எண்பத்தைந்து வாக்குகளும், எதிர்த்துப் போட்டியிட்டவருக்கு முப்பத்திரண்டு வாக்குகளும் கிடைத்தன.

## இரு பிரிவாக மின்சாரம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம்கிராமசபைப் பகுதியில் இரு பிரிவுகளாக மின்சாரம் வழங்கப்படவிருக்கிறது. தொல்புரம், மூளாய், பொன்னாலை ஆகிய கிராமங்களுக்கு மின்சார இலாகாவினரும், சுழிபுரம், சங்கானை மேற்கு, சங்கானைகிழக்கு, சித்தங்கேணி ஆகிய இடங்களுக்கு சுழிபுரம் கிராமசபையினரும் மின்சாரம் வழங்குவர்.

## அரசாங்க அலுவலகங்களில் சரஸ்வதி பூஜை

கொம்பனித்தெரு, வெள்.

இம்முறை நடக்க இருக்கும் சரஸ்வதி பூஜை பல அரசாங்க அலுவலகங்களில் கோலாகலமான முறையில் கொண்டாட இந்து அரசாங்க ஊழியர்கள் மிக அக்கறை காட்டிவருகின்றனர். அத்துடன் மேற்படி சரஸ்வதி பூஜையைக்கொண்டாடும் நாட்களில் பல சமயப் பிரமுகர்களையும் கலந்து கொள்ளச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் இந்து அரசாங்க ஊழியர்கள் செய்துவருகிறார்கள்.

## பஸ் சீர்கேடு

சங்கானை, வெள்ளி

வலி-மேற்குப் பகுதியில் காரைநகர்-கீரிமலை இ. போ. ச. சேவை சீர்கேடு அடைந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் பாடசாலை சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் காலையில் ஒருவாறு பாடசாலை சென்ற பிள்ளைகள் மாலையில் வீடு திரும்ப முடியாத அவலநிலைக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை மாலை சங்கானை-சித்தங்கேணிக்குச் செல்லும் பிள்ளைகள் மானிப்பாயில் பஸ்ஸுக்காகக் காத்து நின்று, இறுதியில் பாதயாத்திரையை மேற்கொண்டனர். மாணவர். பிள்ளைகள் வீட்டுக்குப் போகும்போது இருட்டாகிவிட்டதாம்.

## இரவிலும் சேவை

### விவசாயிகளுக்காக

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவில் உள்ள ஐக்கிய வங்கி விவசாயிகட்கு உதவி செய்யும் பொருட்டு கடன் பணங்களை துரிதமாக வழங்கிவருகின்றது. பிரதானமாக தூர இடங்களான புளியங்குளம், மாங்குளம் போன்ற இடங்களிலிருந்து வரும் விவசாயிகளுக்கு நள்ளிரவில் கூட பணம் வழங்குவதாக வங்கி அதிகாரி ஒருவர் கூறினார்.

## அனாதரவான சைக்கிள்

சங்கானை, வெள்ளி

சங்கானைப் பொலிஸுக்குக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து சார்ஜன்ட் தாமோதரம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் பாழடைந்த கேணி ஒன்றிலிருந்து புத்தம் புதிய றலி சைக்கிள், அனாதரவான நிலையில் கண்டெடுத்தனர். சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் இந்த சைக்கிள் வைக்கப்பட்டுள்ளது.

சைக்கிள் சொந்தக்காரர் சைக்கிளை, வந்து பெற்றுக் கொள்ளலாமெனச் சங்கானைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## இடைத்தேர்தல் முடிவு

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் கிராமசபை 4-ம் வட்டார இடைத் தேர்தலில் எம். அம்பலவாணர் 20 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். [ந நி]

## இடமாற்றம்

வெள்ளவத்தை, வெள்ளி

கொழும்பு மலேரியாத் தடுப்பு இயக்கத்தில் வேலை செய்த திரு. ஐ உமாபதி கயிலாயநாதன் யாழ்ப்பாணம் கச்சேரியில் உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பாற்பண்ணை தொழிலாளர் சமாஜம்

யாழ்ப்பாணம், சனி

ஐக்கிய தேசியக் கட்சியின் கீழுள்ள யாழ் கூட்டுறவு பாற்பண்ணை தொழிலாளர் சமாஜத்தின் நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்:- கே. என். கணபதிப்பிள்ளை, உப தலைவர்கள்:- திரு.என். இராமச்சந்திரன், திரு.எம். குமாரசாமி, திரு. வி.சுந்தரலிங்கம், பொதுக் காரியதரிசி:- திரு. எம்.மகாதேவன், பொருளாளர்:-திரு எஸ், மார்க்கண்டு 7 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரியப்பட்டது.

(ந.நி)





மிஸ்டர்

நீங்கள் வருடக்கணக்காக அநுபவித்து வந்த அதே அலாதியான பரிபூரண திருப்திதரும் முகக்ஷவரத்திற்கு.

Mister

மிஸ்டர்-ஷவரஞ் செய்வதில் பரம ஆனந்தம். அடுத்து முகக்ஷவரஞ் செய்யும்போது இதை பரீட்சித்துப் பாருங்கள் — இதன் சிறப்பம்சம் தான் என்னே! பல தடவைகள் ஷவரஞ் செய்யும்போதும் சொகுசான, திருப்தியான, வியப்பான செயல்ச் சிறப்பைத் தரும்.

ஏக விநியோகஸ்தர்கள் :

ஈ.பி.கிறீஸி அன்ட் கம்பெனி லிமிட்டெட்

தயாரிப்பாளர்கள்

NB 27-57-MASTERS



சிங்கம் மார்க்

LION BRAND SANDANADI THYLAM • சிங்கமார்க் •

சந்தனாதித் தைலம்

வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:- போன்


ப.மு.ஈசன்ஸ்.

88. செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### காணவில்லை



மங்களநாயகம்

16 வயதுடையவரும் சுமார் 4 அடி உயரமுடையவரும், கரவெட்டி புனித இருதயக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தவருமாகிய எனது மகன் மங்களநாயகம் இம்மாதம் 3-ம் திகதியில் இருந்து காணாமல் போய்விட்டார். இவர் பற்றிய தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

மரியதாஸ்,
கஸ்டப்ஸ் ரோட்,
271 முல்லைத்தீவு.

### அறிவித்தல்

காரைநகர் கிராமசபைக்கு இறைமதிப்புவரி செலுத்த வேண்டியவர்கள் 30-10-67-ந் திகதிக்கு முன்னர் தயவுசெய்து பணத்தைச் செலுத்தவும். குறித்த காலங்களில் பணம் செலுத்தத் தவறியவர்கள் மீது வெலியாத்துப்பணமாக 10 வீதம் கூடுதலாக அறவிடப்படும். வரி செலுத்தத் தவறின் வீடுகளிலுள்ள பொருட்களைக் கைப்பற்றிக் கொணர்ந்து ஏலத்தில்விற்க வேண்டி நேரிடும் என்பதை மிக வருத்தத்துடன் அறியத் தருகிறேன்.

கா. க. விசுவலிங்கம்,
தலைவர், கி. ச.
காரைநகர்.

கிராமசபை அலுவலகம்,
காரைநகர், 28-9-67.

270

### "ஜே.பி.யாக நியமிக்குக"

பண்டத்தரிப்பு, வெள்ளி
முள்ளானையைச் சேர்ந்தவரும் இளவாலை புனித என்றியரசர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுபவருமான திரு. வி. கந்தையாவை சமாதான நீதவானுக்கும்படி இப் பகுதி மக்களின்கையெழுத்துகளைக் கொண்ட மகஜர் ஒன்று அரசாங்க அதிபருக்கு அனுப்பி

## 'நாட்டின்முன்னேற்றத்துக்கு தேசிய ஒற்றுமை வேண்டும்'

தச்சன்தோப்பு, வெள்ளி
தச்சன்தோப்பு ஸ்ரீ விக்னேஸ்வரா சனசமூகநிலையத்தின் 7-வது ஆண்டு நிறைவுவிழாவை மேற்படி நிலையத்தில சிறப்பாகக் கொண்டாடினர். விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை விழாக் கொடியை ஏற்றிவைத்தார். உடலை வளர்த்தால் மட்டும் போதாதென்றும் உள்ளத்தையும் வளர்க்கவேண்டுமென்றும் திரு சிதம்பரப்பிள்ளை தமது உரையில் குறிப்பிட்டார். ஒரு கிராமமோ, நாடோ சமூகமோ முன்னேற வேண்டுமாகில் தேசிய ஒற்றுமை வேண்டும் என்று அவர் கூறினார்.

நாவற்குழிக் கிராமசபைத் தலைவர் திரு. கா. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கிராமாபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட இன்னும் பலர் உரையாற்றினா.

### பயிர்ச் செய்கைக் குழு கூட்டம்

ஊர்காவற்றுறை, வெள்ளி
சரவணை பயிர்ச் செய்கைக் குழுக்கூட்டம் சரவணை நாகேசுவரி வித்தியாசாலையில் திரு. த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

புதிய வருடத்திற்கான திட்டமாக கட்டாக்காலி மாடு ஆடுகளைப் பிடித்தல், குளக்கட்டு அற்ற குளங்களில் மகிி எடுப்பதைத் தடை செய்தல், கிராமத்தில் தேனீர் வளர்ப்பை ஏற்படுத்தல் என்பனவற்றை சபை அங்கீகரித்தது.

### காணவில்லை

செபமாலை

26-9-67ந் திகதிகாலை கீரிமலையிலிருந்து அச்சுவேலிக்குப்போகும் வழியில் பஸ்ஸில் வெள்ளியால்மூடிக்கட்டப்பட்ட கறுப்புநிற செபமாலை தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஜே. கொன்ஸ்ரன்ரைன், விஷகடிவைத்தியர், அச்சுவேலி என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். 2201


# இப்பொழுது இலங்கையில் உலகப் புகழ் பெற்ற "ரேட் மாஸ்ட்டர்"




உயர் ரகமான இந்த மெசின்கள் விலையில் சகாயம்; தோற்றத்தில் கச்சிதம்; பல வருடக் காலம் தொல்லையற்ற சுக சவாரியை அளிக்கின்றன.

### கிடைக்கும் மொடல்கள்

ரேட்மாஸ்டர் – 22" ஸ்டாண்டர்ட்
ரேட்மாஸ்டர் – 21" போய்ஸ் ஸ்போர்ட்ஸ்
ரேட்மாஸ்டர் – 21" போய்ஸ் டோன்
ரேட்மாஸ்டர் – 21" லேடிஸ் ஸ்போர்ட்ஸ்
ரேட்மாஸ்டர் ட்ரேட்ஸ்மன் கெரியர்

# ஈ. பி. கிறீஸி அன் கம்பெனி லிமிடட்


## வரிவிளம்பரம்

### தேவை

உத்தியோகஸ்தர்கள்:
நாடு முழுவதிலும் பொது ஜனத் தொடர்பு உத்தியோகத்தர்கள் தேவை. தகுதியுடைய இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். நல்ல ஊதியம கிடைக்கும். (Shannas) ஷண்ணஸ், 27, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2400

குமாஸ்தா:
நல்ல எழுத்து, கணிதம், தட்டெழுத்து, ஆங்கிலம் ஆகியவற்றில் பயிற்சி உள்ள இளைஞர் ஒருவர் தேவை (Casual Clerk) தொடர்பு கொள்க. நந்தி இன்டஸ்றீஸ் அன் ஏஜென்சீஸ் லிமிரட், 20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2395

### விற்பனைக்கு

நெசவாளருக்குத் தேவையான கைத்தறிகளும் பாவோடும் ரேலரும் திறமையான முறையில் ... ருக்கு குறித்த தவணையில் செய்து விற்பனைக்குச்செய்க்கப்படும். தேவையானவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். இ. பழநி, நிர். 93 மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 2399

பாடப்புத்தகங்கள்!
ஸ்ரீ காந்தா அச்சக வெளியீடு: தமிழ் இலக்கிய வினாவிடை G. C. E. வகுப்பு 1967. [1] "அ" பாடத்திட்டத்திற்குரிய உரைநடைத் தொகுப்பும் செய்யுள் தொகுப்பும். [2] மந்தரை சூழ்ச்சிப்படலம் கைகேயி சூழ்வினைப்படலம். [3] பாரதச் சுருக்கம் இவைகளிலிருந்து தெரிந்தெடுத்த 12 மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் சந்தர்ப்பம் கூறும் பகுதிகளும் சேர்ந்து விலை 2 ரூபா. ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2393

கடைக்கட்டிடம்:
சுன்னாகம் பட்டணத்தில் கே. கே. எஸ். வீதியில் வலிகாமம் வடக்கு யூனியனுக்கு முன்பாக இருக்கும் எனக்குச் சொந்தமான கடைக் கட்டிடம் விற்பனைக்கு உண்டு. மின்சார வசதியும் உண்டு. விபரங்கட்கு: எஸ். அல்பிறெட், சேர்ச் வீதி, மல்லாகம். 2396

வான்:
நல்ல நிலைமையில் உள்ள 10 அந்தர் (A 40) வான் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 160/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2202

### கல்வி

வகுப்புகள்:
1967 டிசம்பரில் நிகழவிருக்கும் G. C. E. சாதாரண பரீட்சைக்குரிய கலை-விஞ்ஞான வகுப்புகள் காலையிலும் மாலையிலும் ஆங்கிலம், தமிழ் இருமொழிகளிலும் நிகழும். வகுப்புகள் ஒக்டோபர் 1-ந் தேதியிலிருந்து ஆரம்பமாகும். பெண்களுக்கு தனி வகுப்புகள் உள்ளன. யாழ். போதனா கல்லூரி, 15/1, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 2203

வகுப்புகள்:
G. A. Q. வகுப்புகள் போயா தினங்களில் யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தில் ஆங்கிலம், தமிழ், புவியியல், பொருளியல் ஏனையவை நடைபெறும். C. S. ராஜரத்தினம், காரியதரிசி U. S. T. T. A R. 2550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை

# வர்த்தக ஊழியர் சங்க வருடாந்தக் கூட்டம்

திருக்கோணமலை, வெள்ளி

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் திருக்கோணமலை தேயிலை நிர்வாக ஸ்தாபனக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கக் கிளைக் காரியாலயத்தில் தலைவர் து.பாலேந்திரா தலைமையில் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னதாக திரு. ஏ. ஈ. குணசிங்கா, சேர் அல்பர்ட் பீரிஸ் ஆகியோரின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்குமுகமாக இரண்டு நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு கொழும்பு துறைமுகக் கூட்டுத்தாபனக் கிளைகளின் கூட்டுக்கமிட்டி காரியதரிசி திரு. சி. ஏ. குணவர்த்தனவும், கொழும்பு துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் என்ஜினியரிங் கிளையின் காரியதரிசி திரு. ஹரிஸ் சந்திராவும். திருக்கோணமலை கிளைகளின் கூட்டுக்கமிட்டியின் உபதலைவரான திரு. விக்டர் ராஜமன்னரும், காரியதரிசி திரு. கலியுகவரதனும் அழைப்பின் பேரில் சமுகமளித்திருந்தனர்.

முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இ. வ. ஊ. சங்கத்துக்குமிடையே ஒரு சமரச உடன்படிக்கை கைச்சாத்திட்டு வருவதற்காக வருடக் கணக்கில் போராடி சுற்றில் ஆகஸ்ட் மாதம் 17-ந் திகதி அது நிறைவேறியதையிட்டு இச்சங்கம் பெருமைப்படுவதாகவும், அது ஒரு சாதனையென்றும் தலைவர் தமது உரையில் கூறினார்.

பின் வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: து. பாலேந்திரா [மீண்டும் தெரிவு], உபதலைவர்: சந்திரா முத்துக்குமாரு, காரியதரிசி: எஸ். ஜீவராசா [மீண்டும் தெரிவு], உபகாரியதரிசிகள்: டான் ஆர். மாலதெனியா [மீண்டும் தெரிவு] டபிள்யு. டி. தம்பிப்பிள்ளை, தனாதிகாரி: எஸ். சோமசுந்தரம் (மீண்டும் தெரிவு), உபதனாதிகாரி: எஸ். சோமதேவா. கமிட்டி அங்கத்தவர்கள்: ஈ. ஜி. டினீஸ், ஜீ. என். வீரசூரியா. எம். நடராஜா ஆகியோரும், கணக்கு மேற்பார்வையாளர்களாக ஈ. பி. பேட்டர்ஸ், ஏ. ஞானசேகரம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45, 7-00 & 9-45
Stanley Baker
in
DINGAKA

நியூ காஸிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப்பெண்

REGAL JAFFNA
Time: 4-45 7-00 p. m
9-40 p. m
Anne Bancroft
Peter Finch
in
THE
PUMPKIN EATER

இப்பொழுது வெற்றிகரமாகக் காண்பிக்கப்படுகிறது!
கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ணா [திருமலை]
மொடேர்ன் [பண்டாரவளை] விஜிதா [ஹட்டன்] கல்யாணி [நாவலப்பிட்டி]
அக்டோபர் 1-ம் திகதி முதல்
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர் — பேபிபத்மினி
சாந்தா, சுந்தரராஜன், ஜமுனா,
நாகேஷ், ஷேபா, ஜி. வரலக்ஷ்மி
எம். எஸ். எஸ். பாக்கியம்
முதலியோர் நடித்த
1965-ம் ஆண்டின் சிறந்தபடமென
இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப்பதக்கமும்
பாராட்டும் பெற்ற சிறந்த சித்திரம்
கள்ளமில்லா உள்ளத்தினுல் பிள்ளைகளெல்லாம்என்று
கண்ணெதிரே காணுகின்ற தெய்வங்களானுர்.
ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்
குழந்தையும் தெய்வமும்
4-வது வெற்றி வாரம்:
கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்- எல். விஜயலக்ஷ்மி முதலியோர் நடித்த
நாம் மூவர்


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

இன்று மாலை இழுக்கப்பட்ட 161-வது தேசிய சுவீப் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

**முதற் பரிசு**

34 Q 0913 ரூ. 100,000

**2-ம் பரிசு**

48 W 0124 ரூ. 40,000

**3-ம் பரிசு**

16 K 0637 ரூ. 10,000

தலா ரூ. 788-50 சதம் பெறும் டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 33 W 0735 | 09 X 0473 |
| 36 A 0286 | 29 E 0478 |
| 31 G 0186 | 41 H 0514 |
| 35 Q 0109 | 31 T 0243 |
| 10 J 0923 | 40 F 0364 |
| 01 V 0953 | 25 U 0102 |
| 17 C 0008 | 19 H 0315 |
| 23 K 0437 | 47 J 0363 |
| 06 B 0061 | 10 C 0427 |
| 24 Q 0274 | 18 C 0663 |
| 17 V 0981 | 07 M 0519 |
| 06 G 0343 | 24 G 0172 |
| 01 Q 0044 | 33 F 0456 |
| 43 Y 0065 | 04 J 0289 |
| 24 T 0357 | 21 R 0103 |
| 48 P 0427 | 10 H 0334 |
| 48 L 0164 | 13 A 0033 |
| 05 M 0145 | 48 K 0880 |
| 38 F 0831 | 09 T 0755 |
| 45 Y 0715 | 01 Z 0123 |
| 12 U 0065 | 33 U 0216 |
| 34 T 0250 | 02 N 0714 |
| 34 N 0466 | 46 X 0442 |
| 47 G 0058 | 28 O 0260 |
| 36 L 0912 | 21 O 0595 |
| 34 K 0581 | 23 T 0403 |
| 29 V 0635 | 45 N 0331 |
| 22 S 0173 | 15 A 0672 |
| 25 C 0658 | 29 Q 0295 |
| 22 X 0362 | 26 M 0368 |
| 27 C 0276 | 45 H 0157 |
| 01 V 0861 | 20 C 0634 |
| 18 P 0702 | 42 O 0004 |
| 17 N 0931 | 29 X 0253 |
| 01 N 0808 | 27 G 0636 |
| 43 G 0442 | 46 W 0632 |
| 40 K 0976 | 08 C 0379 |
| 22 L 0862 | 40 N 0071 |
| 29 Q 0953 | 37 J 0207 |
| 47 N 0984 | 46 T 0582 |
| 03 D 0470 | 34 Y 0995 |
| 25 Q 0585 | 27 F 0070 |
| 44 Z 0327 | 47 F 0369 |
| 21 K 0776 | 28 E 0441 |
| 43 N 0461 | 42 O 0058 |
| 34 P 0141 | 16 L 0278 |
| 05 D 0678 | 27 K 0906 |
| 11 V 0560 | 08 L 0927 |
| 48 Q 0271 | 03 Z 0237 |
| 28 G 0931 | 28 J 0377 |

[இவை உறுதிப்படுத்தப்பட வேண்டும்]

## உணவு அமைச்சரின் நம்பிக்கை

கொழும்பு, வியா.

1967-68-ம் வருட காலத்தில் நல்ல நெல் விளைச்சலை எதிர்பார்க்க இடமிருப்பதாக உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்குத் தேவையானவற்றை வழங்கி ஊக்கமளித்தால் நெல் விளைச்சல் அதிகரிப்பதற்கு நல்ல வாய்ப்பிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.


மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி: 6-30, 9-30
போயா தினங்களில்
3 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
நடித்த
ஆசை அலைகள்


# நல்லெண்ணத் தூதுவராக மலேஷியா போகிறேன்

## பிரதம மந்திரி விளக்கம்

கொழும்பு, வியாழன்

மலேஷியாவுக்கு தாம் செய்யவிருக்கும் விஜயம் நல்லெண்ணத் தூதாகவே இருக்கும் என்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயகா கேட்ட கேள்வியொன்றுக்கு பிரதமர் பதிலளித்தார்.

மலேஷிய பிரதம மந்திரி துங்குஅப்துல்ரகுமான் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது விடுத்த ஒரு அழைப்பின் மீதே தாம் மலேஷியா செல்வதாக அவர் தெரிவித்தார்.

தென்கிழக்காசிய நிலைமை பற்றியும், தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதாரக் கூட்டு அமைப்பில் இலங்கை சேர்வதுபற்றியும் தாம் மலேஷியப் பிரதமருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்போவதாகவும், ஆனால் தமது விஜயத்துக்கு முன்னதாகவே அந்தக்கூட்டில் இலங்கை சேர்வதற்குமுடிவு செய்யப்படுவது சாத்தியமில்லையென்றும் பிரதமர் கூறினார்.

## தீப்பெட்டி வழக்கு சிறுவன் விடுதலை

முல்லைத்தீவு, வெள்ளி

ஒட்டிசுட்டானிலுள்ள இராஜா ஸ்டோர்ஸில் ஒரு தீப்பெட்டியை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க ஒரு சதம்கூட விற்றதாக குற்றஞ் சாட்டித்தொடரப்பட்ட வழக்கில் எதிரியான 12 வயது சிறுவன் இராசா அமரசிங்கம் நீதிபதியால் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டார்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதிபதி திரு.பரமகுரு முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. விசாரணையின்போது நீதிபதி சிறுவனிடம் உனக்கு என்ன சம்ளம் கிடைக்கிறது என்று கேட்டார். எதிரியான சிறுவன் 'தெரியாது' என்ருன்.

இப்படிப்பட்ட சிறுவர்களை வேலைக்கமர்த்தும் கடைக்காரர் மீது வழக்கு தொடரலாமே என நீதிபதி முல்லைத்தீவு பொலிசாரிடம் கூறினார்.

தான்பக்கத்துக் கடையில் வேலை செய்வதாகவும் அன்று கடை முதலாளி சாப்பிடப்போனதால் தான் அக்கடையில் நின்றதாகவும், எதிரி கூறினார். நீதிபதி எதிரியை எச்சரித்து விடுதலை செய்து கடைமுதலாளியான இராசதுரையை முடிக்குரிய செலவாக 100 ரூபா செலுத்தும்படி உத்தரவிட்டார்.

## விசாரணைநடைபெறும்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் இம்மாதம் 4-ம் திகதி இரவு வவனியா எம். பி. சிலருடன் வாட்டிற்குச் சென்று வட்டுக்கோட்டை எம். பி. யின் காரில் மோதப்பட்டவரெனக் கூறப்பட்ட நோயாளரைப் பார்க்கச் சென்றபோது எம். பி. க்கும் வைத்திய அதிகாரி டாக்டர் தா. ஞானசுந்தரத்துக்குமிடையே நடந்த சில வாக்குவாதங்களைத் தொடர்ந்து 5-ம் திகதி மேற்படி வைத்தியசாலை சிறு ஊழியர் அனைவரும் வேலை நிறுத்தம் செய்ததைத்தொடர்ந்து அரசாங்க வைத்தியர் சங்கம் நடவடிக்கை எடுக்கும்படி சுகாதார அமைச்சரை வேண்டி இருந்தது. எனவே இச் சம்பவங்களை ஒட்டி அடுத்த மாதம் 3-ம் திகதி முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் சுகாதார சேவைகள் அதிபர் ஒரு விசாரணை நடத்தவிருப்பதாக அறியப்படுகின்றது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**சனி 30-9-67**

[செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 வயலின், 6-45 கிராமசஞ்சிகை — விவசாய உரைச்சித்திரம், 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம்— மாதர்நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரைச்சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

## பெற்ருேர்விழா

யாழ்ப்பாணம், சனி

முள்ளியவளை சைவவித்தியாலய பெற்ருேர் தினவிழா நாளை பிற்பகல் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது வவனியா பிரதமவித்தியாதிகாரி திரு. அ. சந்திரசேகரம் பிள்ளை தலைமையில் நிகழும் இவ்விழாவில் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். வட்டார வித்தியாதரிசி திரு. அ. சி. நல்லையா, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அதிபா திரு. வ. பொன்னம்பலம் ஆகியோர் உரை நிகழ்த்துவர். நாடகம், நடனம், இசைநிகழ்ச்சிகளும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும்.

## தமிழரசுக்கிளை செயலாளர் ராஜினுமா

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை தமிழரசுக்கட்சிக் கிளைச்செயலாளர் திரு. சோமபத்மநாதன் தன்னுடைய பதவியை ராஜினுமா செய்துள்ளார். இவருடன் சேர்ந்து கிளை நிர்வாக சபை உறுப்பினர் திரு. ராசதுரையும் தான் பதவியிலிருந்து ராஜினுமா செய்தார்.

## பஸ்ஸில்லாமல்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ங்களுக்குச் செல்லும் பிரயாணிகள் அவதிப்பட நேரிடுகிறது. இச்சந்திகளில் பிரயாணிகள் கூட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. குரும்பசிட்டி — யாழ்ப்பாணம் பஸ் சேவையும் தினசரி ஸ்தம்பிதம் அடைவதால் அரசாங்க உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், விவசாயிகள் பலத்த கஷ்டம் அடைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org